3. கவன ஈர்ப்பு.

வேலூர் நகராட்சி மன்ற சுதந்திரா உறுப்பினர் திரு. வி. கே. கண்ணப்பன் கொலை செய்யப்பட்டதும் அதனால் அப்பகுதியில் நிலவும் அமைதியின்மையும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, விதி 41-இன் கீழ் டாக்டர் எச். வி. ஹாண்டே அவர்கள் அவசரப் பொது முக்கியம் வாய்ந்த ஒரு காரியத்தை மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவையின் 41-வது விதியின் கீழ் வேலூர் நகராட்சி மன்ற சுதந்திரா உறுப்பினராகிய திரு. வி. கே. கண்ணப்பன் அவர்கள் வேலூரிலுள்ள சைதாப்பேட்டையில் 28-12-1969 அன்று கொலை செய்யப்பட்டதன் விளைவாக அப் பகுதிவாழ் மக்களிடையே நிலவும் அமைதியின்மை பற்றிய அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

4. நடைமுறைக் கேள்வி.

வழக்குமன்றத்தின்முன் இருக்கும் ஒரு வழக்கு குறித்து மன்றத்தில் விவாதம் எழுப்புதல்.

THIRU K. VINAYAKAM: On a point of order, Sir, Is not this matter pending before a Court of Enquiry? Is it not sub-judice? Why should it be raised here? Why should we embarrass the Government to make a statement which will vitiate the judgment to be given by the judging authorities?

(THIRU T. MARTIN: Certainly.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர்கள் கொடுத்திருக்கிற அறிக்கையில் வழக்குக்குக் குந்தகம் விளைவிக்கும் விஷயத்தைப் பற்றி ஒன்றுமே கேட்கவில்லை.

THIRU K. VINAYAKAM: I do not now whether I am understood correctly. நீங்கள் சொல்வது சரி. ஆனால் இந்த விஷயம் கோர்ட்டிலே--இன்னும் எப்.ஐ.ஆர். கூடப் போடவில்லை. சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. புலன் விசாரணை நடந்துகொண்டிருக்கிறது. இந்த நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் இப் பிரச்சினையை எழுப்பியிருக்கக்கூடாது. அதற்கு அரசாங்கமும் இசைவு தந்து அறிக்கை வைக்க முன் வந்திருக்கக் கூடாது. இதில் கட்சிகளை மறந்துவிடுவோம். சுதந்திராக் கட்சிக்காரர் என்பதற்காக எழுப்புவதும், திராவிட முன்னேற்றக் கழகம் இதில் அனுதாபத்துடன் இருப்பதாக அறிக்கை விட முன் வருவதும் சரியல்ல. ஒரு கொலை நடந்திருக்கிறது, குற்றவாளி யார் என்று தெரியவில்லை. கண்டு பிடிக்க வேண்டும். இந்த நேரத்தில் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் கவனத்திற்கு ஒன்றைக் கொண்டுவர விரும்புகிறேன். அங்கத்தினர் தனது அறிக்கையில் May I bring to the attention of the Hon. Chief Minister the murder of so and so and the consequent feeling of insecurity among the residents of that area? என்றுதான் கேட்டிருக்கிறார்கள். இதற்கு அமைச்சர் அறிக்கை கொடுப்பது எந்த விதத்திலும் வழக்கைப் பாதிக்காது.

திரு. என். எஸ். வி. சித்தன் : ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவை விதிகள் 41, 42-இன் கீழ் எழுப்பப்படுகிற பிரச்சினைகள் அண்மையில் நடந்த ஒன்றைப் பற்றியதாகவே இருக்கவேண்டும் என்று இருக்கிறது. ஆனால் இந்தக் கொலை 23-12-1969 நடந்திருக்கிறது. ஆகவே இந்த விதியின் கீழ் அது வருமா என்பதற்குத் தங்களுடைய தீர்ப்பை எதிர்பார்க்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஏற்கனவேயே மாண்புமிகு உறுப்பினர் இதுபற்றி தம்முடைய நோட்டீசை—அறிவிப்பை—கொடுத்து விட்டார்கள். இலாக்காவுக்குப் போய் விடை பெற இவ்வளவு நாளாகியிருக்கிறது. ஆகவே இதில் ஒன்றும் பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை.

திரு. டி. மார்டின் : சார், ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எந்த விதியின் கீழ்?

THIRU T. MARTIN : You must allow me to speak. As a Member I am standing and I want to raise a point of order. How could I raise a point of order unless I am allowed?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்ப அனுமதிக்கிறேன். ஆனால் எந்த விதியை மீறி இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட வேண்டும்.

திரு. டி. மார்டின் : சார், பாயின்ட் ஆப் ஆர்டர் ரெயிஸ் பண்ணுகிறபோது எந்த விதியை மீறியிருக்கிறது என்று கேட்டு provision போடுவது உரிமையைத் தடை பண்ணுவதாக இருக்கிறது. இது உறுப்பினர்களுடைய இண்டிபெண்டென்ஸ்ஸையும் right ஐயும் பாதிப்பதாக இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த அவையில் முறைகேடான நிகழ்ச்சிகள் நடைபெறுகிற நேரத்தில், விதிமுறைகள் மீறப்படுகிற நேரத்தில் சுட்டிக்காட்ட உரிமை இருக்கிறது. அதை மறுக்கவில்லை. தாங்கள் பாயின்ட் ஆப் ஆர்டர் என்று சொன்னவுடன் அனுமதி தந்திருக்கிறேன். ஆனால் எந்த விதி மீறப்பட்டிருக்கிறது என்பதை முதலில் சுட்டிக்காட்டிவிட்டு எழுப்புங்கள்.

1970 மார்ச் 14]

THIRU T. MARTIN : I wish to raise this point on the ground that the regulation of business, viz. allowing the Hon. Chief Minister to make a statement is itself against the well established principles and rules under which this House is governed. There are ever so many grounds .. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நோ. நம்முடைய திரு. விநாயகம் அவர்கள் கேட்டதுதான். அதற்கு நான் ரூலிங் கொடுத்துவிட்டேன்.

THIRU T. MARTIN : This is on a different footing.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இங்கே கொடுத்து இருப்பது வழக்குபற்றியல்ல, அந்த நிகழ்ச்சியைத் தொடர்ந்து உள்ள consequent feeling of insecurity among the residents of that area என்பதுபற்றித்தான் கேட்கப்பட்டிருக்கிறது. ஆகவே, அதற்கு நான் ரூலிங் கொடுத்து விட்டேன்.

THIRU T. MARTIN : May I take it from the Chair that the Hon. Chief Minister will not refer anything to the merits of the case or name of the accused or name of the party to which he belongs or nature of the incident? If he confines himself only to security of residents in that area then it will be within our rules. If he goes beyond that and give names, then it will be hit by the rules.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முதலமைச்சர் அவர்கள் அறிக்கையைக் கொடுக்கிற நேரத்திலே, நீங்கள் இந்த வரம்பிற்குட்பட்டுத்தான் கொடுக்க வேண்டுமென்று கூறமுடியாது. உறுப்பினர்கள் பேசுகின்ற நேரத்திலே சில வரம்புகள் இருக்கின்றன. வரம்பு மீறிப் பேசுகின்ற நேரத்திலேதான் சுட்டிக்காட்டப்படுகிறதே தவிர, முன்கூட்டியே உறுப்பினர்கள் இப்படித்தான் பேச வேண்டுமென்று வரம்பு கட்டுவது முறையாக இருக்காது. பேசுகின்றபொழுது விதிமுறைகளுக்கு மாறாகப் பேச்சு இருந்தால் —இந்த அவையில் அதற்கென சில முறைகளை மேற்கொண்டு வருகின்றோம்—அதன்படி அவற்றை, வழக்கினைப் பாதிக்கக்கூடியதாக இருந்தால் நீக்கிவிடலாம் என்று சொல்லலாம். ஆனால் அறிக்கையைக் கொண்டுவருவதற்கு முன்பே என்ன என்ன இருக்கும், என்ன என்ன இருக்காது என்பதற்கு உறுதி கொடுக்க முடியுமா என்பது என்ன நிலைமை என்று புரியவில்லை.

3. கவன ஈர்ப்பு (தொடர்ச்சி).

வேலூர் நகராட்சி மன்ற சுதந்திரா உறுப்பினர் திரு. வி. கே. கண்ணப்பன் கொலை செய்யப்பட்டதும் அதனால் அப் பகுதியில் நிலவும் அமைதியின்மையும் (தொடர்ச்சி).

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : வேலூர் நகராட்சியைச் சேர்ந்த சுதந்திரா கட்சி உறுப்பினர் திரு. வி. கே கண்ணப்பன், 28-12-1969 அன்று இரவு சுமார் 8-30 மணிக்கு, சைக்கிள்